# என் வாழ்வின் யேசுவே எந்நாளும் இங்கே

என் வாழ்வின் யேசுவே எந்நாளும் இங்கே
எல்லாமே நீயாக வேண்டும்
எனக்கெல்லாமே நீயாக வேண்டும் (2)
சோகங்கள் ஆறாக நான் வாழும் போது
தாயாக நீ மாற வேண்டும் - அன்புத்
தாயாக நீ மாற வேண்டும்

**1**
பாரங்கள் தாங்காமல் சாய்கின்ற போது
பாதங்கள் நீயாக வேண்டும் - என்
பாதங்கள் நீயாக வேண்டும் (2)
பாவங்கள் கடலாகி நான் மூழ்கும் போது
ஓடங்கள் நீயாக வேண்டும் - வரும்
ஓடங்கள் நீயாக வேண்டும்

**2**
போராட்டம் சூழ்ந்து என்னை தீவாக்கும் போது
பாலங்கள் நீயாக வேண்டும் - இணை
பாலங்கள் நீயாக வேண்டும் (2)
தீராத ஆபத்தில் நான் தேடிப் பயிலும்
பாடங்கள் நீயாக வேண்டும் - மறை
பாடங்கள் நீயாக வேண்டும்

**3**
காலங்கள் எல்லாம் என் நெஞ்சின் வீட்டில்
தீபங்கள் நீயாக வேண்டும் - சுடர்
தீபங்கள் நீயாக வேண்டும் (2)
தாகங்கள் தீராது நான் ஏங்கும் போது
மேகங்கள் நீயாக வேண்டும் - மழை
மேகங்கள் நீயாக வேண்டும்